

# தன்னலமற்ற சேவை

## வித்யாகர் - சமூக முன்முயற்சி






வாழ்க்கையின் குறிக்கோளே நம்மை சுற்றியுள்ளவற்றை சரி செய்ய நம்மால் முடிந்த வழியில் ஏதேனும் செய்வதே ஆகும். நாம் செய்வது ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எது போல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

வித்யாகர், தன் உள்ளுணர்வு சொன்னதை மட்டுமே கேட்டு ஒரு சினிமா தியேட்டரில் கைவிடப்பட்ட பிறந்த குழந்தையை தன் வீட்டிற்கு எடுத்து வந்த போது, அவர் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கவில்லை. ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தை என்பது எவ்வளவு கொடுமை என்பது அவருக்குத் தெரிந்ததால், அந்த சின்ன சிசுக்கு ஒரு வீடு கொடுக்க நினைத்தார். அவரே ஒரு குடிசைப் பகுதியில் எந்த வித வசதியும், திட்டமும் இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும், இந்த குழந்தைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அப்போது தான், அவரினுள் இருந்த அவரின் வாழ்க்கையின் அர்த்தம் பிறந்தது! அதாவது, யாருமில்லாதவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்பதே. குடிசைப் பகுதியில் இருந்த மக்கள் அவருக்கு கொஞ்சம் உதவி செய்ய, அவரும் உண்டியல் எடுத்துக் கொண்டு பணம் வசூலிக்க மின்சார ரயில், மெரினா பீச் மற்றும் பூங்கா என்று பல இடங்கள் சுற்றி வந்தார்.

மைசூரில் ஒரு பிரச்னையான குடும்பத்தில் பிறந்த அவருக்கு, யாருமில்லாமல் இருப்பதன் கஷ்டம் அவர் நன்கு அறிந்ததே. ராமகிருஷ்ணன் என்ற ஒரு அன்பான மனிதர் வித்யாகரை எடுத்து, ஆதரவு கொடுத்து வளர்த்தார். வித்யாகருக்கு, அவரின் உள்ளுணர்வு என்ன செய்ய நினைத்ததோ அதற்கான விதை இங்கு தான் விதைக்கப்பட்டதாக நினைக்கிறார். மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் வொர்க்கில் இளங்கலைப் பட்டமும், சி.எம்.சி, வேலூரில் எம்.ஃபில் பட்டமும் பெற்ற அவருக்கு தனக்கு விதிக்கப்பட்ட பாதை இது தான் என்பதை உணர்ந்தார். அதோடு, அவருக்குக் கிடைத்த அன்பும், பரிவும் அவர் அதை மற்றவர்களுக்கு திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. ஒரு குழந்தையைக் காப்பாற்றிய அவரின் முதல் செயல், பல குழந்தைகளைக் அவரிடம் கொண்டு வர, அப்போது பிறந்தது தான் 'உதவும் கரங்கள்' - கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான சமூக சேவை நிறுவனம். அனாதை இல்லம் தவிர, உடல் நிலை, மன நிலை சரியில்லாத, ஆதரவற்ற வயதான பெண்களுக்கும் தற்போது உதவிக்கரம் நீட்டுகிறது. மேலும் உதவும் கரங்கள், 2000+ மாணவர்களுக்கு பள்ளியும், தினக்கூலி வேலை செய்பவர்களுக்கு காப்பகமும், பெண்களுக்கு தையலகமும், மருத்துவ சேவை, மறுவாழ்வு மையம், ஆம்புலன்ஸ், மார்ச்சுவரி, தகன அறை என்று பலவற்றையும் நடத்துகிறது.

மற்றவர்களுக்கு உதவுவதே அவரின் வேட்கையாக இருக்கும் ஒரு தன்னடக்க மனிதரரான வித்யாகர், 'தான் இதுவரை கடந்து வந்த பாதையும், உதவும் கரங்கள் என்ற ஒரு நிறுவனமும், எதுவுமே அவர் திட்டமிட்டு செய்தவை அல்ல' என்று சொல்கிறார். சமூகத்தில் வளர்ந்து வரும் தேவைகள், நல்ல கல்வி மற்றும் திறமைகளுடன் கூடிய ஒரு பாதுகாப்பான இடம் ஆகியவற்றை அடுத்த தலைமுறையினருக்கு தரக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரின் நோக்கமே, உதவும் கரங்கள் உருவாகக் காரணம் என்கிறார்.

வித்யாகர், பிறந்தவுடனே கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான அனாதை ஆசிரமமாக உதவும் கரங்களை ஆரம்பித்தார். குழந்தைகள் தைரியமாகவும், தன்னிச்சையாக செயல்படவும் வளரத் தேவையான மிக முக்கிய ஊட்டச்சத்தான பெற்றோரின் பாசம் மற்றும் உணர்ச்சி பந்தத்தை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். அதே சமயம் அவர்கள் பரிவும், இரக்கமும் கொண்ட சமூகத்தின் பிள்ளைகளாக வளர வேண்டும் என்று விரும்பினார். இதுவே அவரின் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

அதோடு அந்த பிள்ளைகளை 'அனாதைகள்' என்று குறிப்பிடப்படுவதை மாற்றி, அவர்களையும் சமுதாயத்தில் எல்லோரையும் போல் சமமாக இருக்குமாறு காட்ட வேண்டும் என்றும் விரும்பினார். இதை செய்வதற்கு அவர் எடுத்த முயற்சி தத்து எடுப்பதை ஊக்குவித்தது. தத்து எடுப்பதற்கான அவரின் பல முயற்சிகள் இந்த குழந்தைகளுக்கு ஒரு நல்ல திருப்பத்தைக் கொண்டு வரும் என்று நம்புகிறார்.

40 பிள்ளைகள் கொண்ட அனாதை ஆசிரமம் ஆரம்பித்தவுடன், இந்த பிள்ளைகள் சமுதாயத்தின் நாளைய நம்பிக்கைத் தூண்களாக வளர அவர்களுக்கு கல்வி தான் மிக முக்கியத் தேவை என்பதை உணர்ந்தார். இந்த தேவை தான் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க அவரைத் தூண்டியது. பிள்ளைகள் வெளி உலகைப் புரிந்து கொள்ளவும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், தன்னம்பிக்கையும், தைரியமும் கொண்டு தன்னிச்சையாக செயல்படவும், தனியாக வாழவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தார். அதற்காக, வெளியிலிருந்து பிள்ளைகளும் இந்த பள்ளியில் சேர்க்கப்பட்டனர். இது இவரின் பிள்ளைகள் அவர்களுடன் சேர்ந்து பழகும் போது சமூகத்துடன் அவர்கள் தங்களைப் பொருத்திக் கொள்ள உதவியாக இருக்கும் என்று நினைத்தார்.







அவரின் வழிகாட்டியாக இருந்த ராமகிருஷ்ணன் பேரிலே இயங்கும் இவரின் பள்ளியான ராமகிருஷ்ணா வித்யாலயா இன்று 1-12 வகுப்புகளும், 2000+ மாணவர்களும் கொண்டுள்ளது. மனநிலை சரியில்லாத பிள்ளைகளுக்காகவே ஒரு தனி வகுப்பு, வழக்கமான பள்ளி பாடங்கள் மற்றும் தொழில் சார்ந்த பயிற்சி முறைகளோடும் இருக்கிறது. மாணவர்கள் பள்ளிப்படிப்பை முடித்து வெளியில் சென்ற பின்னும் கூட, தன் தொடர்பில் உள்ளவர்களைக் கொண்டு உதவித் தொகையுடன் அவர்களுக்கு மேல் படிப்போ அல்லது வேலை வாய்ப்போ கிடைப்பதை உறுதி செய்கிறார். எந்த பிண்ணனியிலிருந்து வந்தாலும், கல்வி நிச்சயம் அவர்களைத் தலை நிமிர்ந்து நடக்க செய்யும் என்று உறுதியாக நம்புகிறார். ஆசிரியர்கள், சமூக சேவை செய்பவர்கள், மற்றும் மன நோய் மருத்துவர்களின் உதவி கொண்டு வெளி உலகத்தைப் புரிய வைத்து, மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாக அமைய நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறார். முன்னாளில், நல்ல இரக்க மனசுடைய மக்கள் உதவி செய்ய முன் வந்தனர். இந்த சமூக ஆர்வலர்கள் பின்னாளில் சமூக சேவை செய்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். தற்போது, இது போல் இருப்பவர்களை பார்க்க முடியவில்லை என்று சோகமாக சொல்கிறார்.

தன் பிள்ளைகளுக்கு திருமணம் கூட நடத்தி வைப்பதாக வித்யாகர் சொல்கிறார். இதுவரை, 224 பெண்களுக்கு திருமணம் செய்து வைத்ததாகவும், 330 குழந்தைகளுக்கு தான் தாத்தா ஆகியிருப்பதாகவும் பெருமையாக சொல்கிறார். குழந்தைகள் நன்றாக இருக்கிறார்களா என்பதை உறுதி செய்ய அடிக்கடி சென்று அவர்களைப் பார்க்கிறார். இன்னும் கேட்டால் சில ஆவணங்களுக்காக, நிறைய பிள்ளைகளுக்கு அவரின் பெயரான வித்யாகர் என்பதைக் குடும்பப் பெயராக கொடுத்துள்ளார். அனைத்து பிள்ளைகளும் விட்டு சென்ற பின்னும் கூட ஏதேனும் உதவி செய்ய பள்ளிக்கு வருவதோடு, அவரை 'அப்பா' என்றே அழைக்கின்றனர். எல்லா பிள்ளைகளையும், எல்லா நிலைகளிலும் அப்பாவாக அவர் நன்கு பார்த்துக் கொண்டாலும், பெண் பிள்ளைகள் என்று வரும் போது அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை மிகவும் பாதுகாக்கிறார்.

வித்யாகர் மனநலத்துக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார். கீழ்பாக்கம் மனநல மருத்துவமனையில் சிறிது காலம் வேலை செய்ததால், மனநல சிகிச்சை எவ்வளவு கஷ்டம் என்பதை அறிந்து, அதன் மேல் ஒரு தனி மரியாதை அவருக்கு உண்டு.

கடந்த காலத்தில் அவரின் மனநிலை பற்றி பேசும் போது, அது வறுமை, மரபணு காரணிகள், ஆளுமை குறைபாடுகள், தவறான குடும்ப அமைப்பு ஆகியவையின் விளைவே என்று சொல்கிறார். தற்போது, இவை தவிர மேலும், தவறான உறவுமுறை, தவறான வஸ்துகள், சரி செய்ய தவறு செய்வது, செய்யும் தவறின் பின்விளைவுகளை யோசிக்க தெரியாத அறியாமை ஆகியவையும் சேர்ந்துள்ளது. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாக கையாள வேண்டும். மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வும் கூட இவரின் பல சேவைகளில் ஒன்றாகும்.

கோவிட்-19 காலத்தில், உதவும் கரங்கள் சென்னையின் பல பகுதிகளுக்கு பல உதவிகள் செய்து தொற்று நோய் பரவுவதைத் தடுக்க தங்களால் முடிந்ததை செய்தனர். அதிகமாகிக் கொண்டே சென்ற எண்ணற்ற இறப்புகளால், பிணவறைகள் மற்றும் மயான இடம் போதவில்லை. ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்த அவர், மயான இடம் கட்ட திட்டமிட்டு அதை உடனே முடிக்கவும் செய்தார்.

எதிர்கால திட்டம் பற்றி உரையாடும் போது, அந்தந்த சமயத்தில் சமூகத்தின் தேவை எதுவோ அதை செய்ய முனைவார் என்று தன்னடக்கத்தோடு சொல்கிறார். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது அவரின் தனிப்பட்ட விருப்பம் அல்ல... மக்களின் அப்போதைய தேவையை பொறுத்தே என்கிறார். அவர் செய்து கொண்டிருப்பதை இதுவரை அவரை செய்யும்படி யாரும் சொல்லவில்லை என்று நம்புகிறார். சமூகத்துக்கு இன்று என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வதாக சொல்கிறார். இந்த பயணத்தில் அவர் சந்தித்த பிரச்னைகளை எதிர் கொண்டு அவர் இன்று இருக்கும் இடத்தை அடைய அவரின் மன உறுதியும், விடா முயற்சியுமே காரணமாகும்.

ஓஃப்ரா வின்ஃப்ரே-வின் வார்த்தைகள், 'உங்களின் மரபு என்பது நீங்கள் எத்தனை பேரின் வாழ்வில் நல்ல மாற்றம் கொண்டு வந்தீர் என்பதே!' வித்யாசாகரின் வாழ்வு எத்தனை பேர் வாழ்வில் நல்ல மாற்றம் என்பது அல்ல; இன்று மிக அத்தியாவசியமாக தேவைப்படும் ஒரு மிகப் பெரிய சமூக மாற்றத்தை தொடர்ந்து செய்வதே ஆகும். ஒருவர் நினைத்தால் என்ன மாற்றம் வேண்டுமானாலும் கொண்டு வர முடியும் என்பதற்கு வித்யாகர் ஒரு சிறந்த உதாரணம். உண்மையான சாம்பியனாக இருக்கும் அவர், இன்னும் பலரின் வாழ்வை மேம்பட செய்வது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

சுபாஷிணி கோமேஸ்வரன்

